## அத்தியாயம் 28

" இந்த லேப்டாப் எப்பிடி இருக்குனு பாரு" என்று ஸ்ரீதேவியிடம் தன் மொபைலிலிருந்த அந்த லேப்டாப்பின் போட்டோவை காண்பித்தான் ஜேசி.

" சூப்பர்டா! நீ இத தான் கி்ஃப்ட் பண்ண போறியா?"

" யெஸ். மாம்கு வொர்க் பண்ணுறதுக்கு இது யூஸ்ஃபுல்லா இருக்கும்" என்று சொல்லியவனை பார்த்து சிரித்தாள் ஸ்ரீதேவி.

" உனக்கு கீத்து அக்கானா ஏன் அவ்ளோ பிடிக்குது?" என்று தலையை சரித்து கேட்டவளை தன் அருகில் அமர சொன்னவன் " பிகாஸ் ஷீ இஸ் மை மாம்" என்று சொன்னவன் " யூ நோ வாட்?? அவங்க ஒரு நல்ல ஃப்ரெண்ட். என்னோட லைஃப்ல வொர்ஸ்டான டைம்ல எனக்கு தைரியம் குடுத்து என்னை ஒரு நார்மல் பெர்ஸனா மாத்துனவங்க" என்று சொல்லவும் ஸ்ரீதேவி அதை கேட்டு தலையசைத்தாள்.

" அவங்க ஒரு நல்ல ஃப்ரெண்ட், குட் கேர்டேக்கர், பெஸ்ட் மாம்" என்று மனப்பூர்வமாக கூறினான்.

இருவரும் கீதாவிற்கு பரிசளிப்பதை பற்றி பேசியதற்கான காரணம் அவளுடைய பிறந்தநாள் இன்னும் ஒரு வாரத்தில் வர இருப்பது தான். இந்த பிறந்தநாளின் போது தான் எதாவது உபயோகமான பரிசாக அளிக்க வேண்டுமென்று யோசித்தவன் காலையிலிருந்து ஆன்லைனில் தேடி பார்த்து அந்த லேப்டாப்பை ஸ்ரீதேவியிடம் காட்டிஅவளுடைய ஒபீனியனை கேட்டான்.

அவன் வேலையில் சேர்ந்த பிறகு வரும் முதல் பிறந்தநாள் என்பதால் மிகவும் ஆர்வத்துடன் அந்த கி்ஃப்டை தேர்வு செய்தான்.

ஒவ்வொருவரும் பலவிதமாக யோசித்து பரிசுகளை வாங்கி வைத்திருக்க பிறந்தநாள் கொண்டாட வேண்டியவளோ அந்த சிந்தனையின்றி தன் வேலைகளில் மூழ்கி கிடந்தாள்.

அவளுடைய பிறந்தநாள் ஆரம்பித்த இரவு 12 மணிக்கு நண்பர்கள் கேக்குடன் சர்ப்ரைஸ் கொடுக்க அபிராமியும் கண்ணனும் ஸ்கைப் மூலமாக வாழ்த்து தெரிவித்தனர். மறுநாள் காலை அனு கி்ஃப்டுடன் வந்தவள் பிறந்தநாளும் அதுவுமாக கீதா போனும் கையுமாக சுத்துவதை கண்டு கடுப்பாகி விட்டாள்.

அவள் கையிலிருந்த போனை பிடுங்கியவள் " அண்ணி! திஸ் இஸ் டூ மச்! நாங்க எல்லாரும் உங்களுக்காக இங்க வந்தா நீங்க போன்ல என்ன பண்ணிட்டு இருக்கிங்க?" என்று சொல்லி கோபமாக முறைத்தாள்.

" அனு! அது இம்பார்டெண்ட் கால்"

" சோ வாட்?? ஒழுங்கா இன்னிக்கு ஃபுல்லா எங்க கூட ஸ்பென்ட் பண்ணனும்" என்று மிரட்டி அவளை கூட்டி சென்றாள்.

மாலையில் ரியா புது டிரஸ்ஸுடன் வந்து அதை அணியுமாறு கூறும் போது முதலில் கீதா பெரிதாக நினைக்க வில்லை. பின்னர் கண்ணை மூடி வீட்டின் பின்புறம் அழைத்து செல்ல கீதாவுக்கு ஏதோ வித்தியாசமாக இருக்கவே அமைதியாக அவளுடன் சென்றாள்.

அங்கே சென்றதும் அவள் கையை எடுத்தாள். அப்போது அங்கே அவளது அனைத்து நண்பர்களும் நின்று கொண்டிருக்க சுற்றிலும் விளக்குகள் கண் சிமிட்டி கொண்டிருந்தன. நடுவில் ஒரு மேஜையில் கேக் வைக்கப்பட்டிருக்க அங்கே வந்த கீதாவை அவினாஷ் தோளோடு சேர்த்து அணைத்து கொண்டான். " வெரி வெரி ஹாப்பி பர்த்டே மை டியர் பிரின்சஸ்" என்று சொல்ல அவளும் " தேங்க்யூ அவி " என்று அவனது கையை பிடித்து கொண்டாள். அடுத்து யோகா " ஓகே! அவளை கேக் கட் பண்ண விடுங்கப்பா" என்று சொல்ல அனைவரும் அவளை சூழ்ந்து நிற்க கேக்கை வெட்ட போனாள் கீதா.

அதற்குள் ரேவதி "அண்ணி! ஃபர்ஸ்ட் கடவுள் கிட்ட ஏதாவது வேண்டிகிட்டு அப்றமா கட் பண்ணு" என்று சொல்ல கீதா மகிழ்ச்சியுடன் தலையாட்டி விட்டு கண்களை மூடி வேண்ட ஆரம்பித்தாள்.

" காட்! நான் கேட்டதுக்கு அதிகமாவே எனக்கு உங்க ப்லெஸ்ஸிங் கெடச்சிருக்கு! நாளைல இருந்து நான் வாழப் போற நியூ லைஃப்க்கு உங்க ஆசிர்வாதம் வேணும். ப்லெஸ் மீ" என்று சொன்னவளை நண்பர்கள் குழப்பத்துடன் பார்க்க ரேவதியின் அருகில் நின்றவன் நறநறவென்று பற்களை கடிக்கும் சத்தம் அவளுக்கு நன்றாகவே கேட்டது.

" கம் ஆன் வருண்! பிறந்தநாள் அன்னிக்காச்சும் அவங்களை எதும் சொல்லாம இரு, ஈவன் மனசுக்குள்ள கூட" என்று சொல்லிவிட்டு அவனை கூர்மையாக பார்த்தாள் ரேவதி.

" ட்ரை பண்றேன்" என்று கூறியவனை என்ன செய்யவென்று தெரியாமல் விழித்தாள் ரேவதி.

கேக் வெட்டியதும் முதலில் வாயை திறந்த ஜேசிக்கு ஊட்டிவிட்டவள் பின்னர் அனைவருக்கும் ஊட்டிவிட வருணின் அருகில் வந்தவள் அவனது கையில் கொடுத்து விட்டு சென்றாள். அனைத்தும் நன்றாக தான் போய்க் கொண்டிருந்தது, கார்த்திக் வரும் வரை...

ஜேசி அவன் வரும் போதே ஸ்ரீதேவியின் காதில் " இவன் எதுக்கு வந்தான்?? இப்போ டாட் இவனை பாத்தாலே டென்சன் ஆயிடுவாரே!" என்று கவலையுடன் கூறினான்.

கையில் பொக்கேவுடன் வந்தவன் கீதாவிடம் சென்று " ஹாப்பி பர்த்டே கீத்து" என்று சொல்ல கீதா " தேங்க்யூ" என்று சொல்லி அவன் கையிலிருந்த பொக்கேவை வாங்க போனாள்.

அதை கொடுக்காமல் பின்னே செல்ல கீதா என்னவென்று யோசிக்கும் போதே முட்டியிட்டு அவளை பார்த்து " ஐ லவ் யூ சோ மச் கீதா! வில் யூ மேரி மீ?" என்று கேட்க கீதா அதிர்ச்சியில் வாயடைத்து நின்றாள்.

மற்றவர்களோ இமைக்க மறந்து நின்றனர். திடீரென்றூ யாரோ கை தட்டுவது கேட்டு அனைவருக்கும் சுயநினைவு வந்தது.

கையை தட்டுவதை நிறுத்திய வருண் கார்த்திக்கையும் கீதாவையும் எரிப்பது போல பார்த்தவன் அதை பார்த்து அதிர்ந்து போயிருந்த நண்பர்களை நோக்கியவன் " என்னாச்சு உங்க எல்லாருக்கும்?? ஏன் இவ்ளோ ஷாக் ஆகுறிங்க?? கம் ஆன். லெட்ஸ் செலிப்ரேட்" என்று சொல்ல கீதா " வருண்" என்று எச்சரிக்கும் தொனியுடன் பேச அவளை பார்வையாலே அமைதியாக்கினான்.

கீதா கார்த்திக்கின் புறம் திரும்பியவள் " லிஷன் கார்த்திக்! இதுக்கு நான் ஆல்ரெடி உனக்கு பதில் சொல்லிட்டேனு நெனைக்கிறேன்., ப்ளீஸ் டோண்ட் கம்பெல் மீ., லீவ் திஸ் ப்ளேஸ்" என்று சொல்ல அவன் அமைதியாக வெளியேறினான்.

வருணின் அருகில் வந்தவள் " வருண்! இப்போ எந்த டிராமாவும் தேவை இல்லை. நீயும் கௌம்பு" என்று சொல்ல அவன் மறுத்தபடியே " அஹான்!

அப்பிடி உன்னோட இஷ்டத்துக்குலாம் என்னால போக முடியாது" என்று சொல்லி அவளை கோபத்துடன் பார்த்தான்.

" இந்த ஒரு வருஷத்துல எதுவுமே மாறல. தென் வொய் டோண்ட் யூ அக்செப்ட் ஹிஸ் ப்ரபோஷல்?? இன் ஃபேக்ட் உங்க ரெண்டு பேருக்கும் நெறையா சிமிளாரிட்டிஸ் இருக்கு. ஸ்டடீஸ், ப்ர ஃபஷன், ஈவன் ஃபுட் ஹேபிட்ஸ் கூட., எப்பிடி பாத்தாலும் உனக்கு என்னை விட அவன் பெஸ்டா தான் இருக்கான்"

" ஷட் அப் வருண்"

" என்னை அமைதியாக்கிறதால எதுவும் மாறப் போறது இல்ல. எல்லா பொண்ணுங்களும் இப்பிடி தானா?? ஒருத்தனை விட இன்னொருத்தன் பெஸ்டா தெரிஞ்சா விட்டுட்டு ஈஸியா போயிடுறீங்க?"

அவினாஷ் வருணை தடுக்க வர அவனை விலக்கி விட்டு பேச தொடங்கினான்.

" லவ், மேரேஜ் இப்பிடினு ஃபால்ஸ் ஹோப் குடுத்துட்டு இன்னொருத்தன் வந்ததும் கொஞ்சம் கூட யோசிக்காம அவன் பின்னாடி போன அந்த சரண்யாவும், நீயும் ஒன்னு தான்" என்று அவன் முடிக்கவும் கீதாவிற்கு வெறுத்துவிட்டது.

அங்கிருந்த அஜியோ அதிர்ந்தான். யாரை யாருக்கு ஒப்பிடுவது என்ற அதிர்ச்சியில் வருணை பார்க்க வருணோ கல் போல நின்று கொண்டு கீதாவையே பார்த்து கொண்டிருந்தான்.

அதற்கு மேல் பொறுக்க முடியாத கீதா கோபத்துடன் " இனாஃப் வருண். நீ ரொம்ப பேசிட்ட., என்ன சொன்ன ?? நானும் சரண்யாவும் ஒன்னா?? எப்பிடிடா?? எப்பிடி நானும் அவளும் ஒன்னு?" என்று சொல்லியபடி அவனின் சட்டை காலரை பிடித்து கேட்டாள்.

" எப்போவாச்சும் நான் உன் கிட்ட உன்னோட பேர்ல எவ்ளோ ப்ராபர்ட்டி இருக்குனு கேட்டிருக்கேனா?? உன் கிட்ட காஸ்ட்லி கிஃப்ட்ஸ் எதாச்சும் டிமாண்ட் பண்ணி அடம் பிடிச்சிருக்கேனா?? இல்ல என்னை லவ் பண்ணுறங்கீறதுக்காக உன்னோட ஃப்ரெண்ட்ஸ் ஃபேமிலி கிட்ட இருந்து

உன்னை தூரமா விலக்கி வச்சேனா ?? பதில் சொல்லு??" என்று கேட்டவள் அவன் காலரை விட்டாள்.

" இந்த கார்த்திக் பின்னாடி நான் போய்ட்டேனு சொல்ற தானே! அப்பிடி போறவ ஏன் இன்னிக்கு வரைக்கும் தனியா இருக்க போறேன்?? எப்போவோ அவனை கல்யாணம் பண்ணி நான் செட்டில் ஆகிருக்க மாட்டேன்?? அவன்னு இல்ல , வேற எவன் வந்தாலும் உன்னை விட எனக்கு பெஸ்டா தோணுனது இல்ல வருண், எப்போவுமே. " என்று சொல்லி கண்ணீரை துடைத்தாள். வருண் இந்த கேள்வியை எதிர்பார்க்கவில்லை

ரியா வந்து அவளை பேசாத என்று தடுக்க " விடு ரியா! நான் இன்னிக்கு பேசனும். இல்லனா இவனை மாதிரியே நீங்களும் என்னை பத்தி தப்பாவே நெனைப்பிங்க" என்று கூறவும் ரியாவும் அமைதியானாள்.

கீதா உள்ளே சென்றவள் சில டைரிகளை கையோடு கொண்டு வந்தாள். அதை வருண் முன் வீசியவள் " நான் என்னிக்குமே என்னோட லவ்வ வெளியே காட்டிக்கிட்டது இல்ல. எனக்கு எப்பிடி எக்ஸ்ப்ரஸ் பண்ணனும்னு அப்போ புரியல. ஆனா இது எல்லாமே என்னோட ட்ரூ ஃப்லீங்க்ஸ். உன்னை நான் எவ்ளோ லவ் பண்ணேனு இந்த டைரீஸ்கு உன்னை விட நல்லாவே தெரியும்" என்று சொல்லிவிட்டு கண்ணில் வலியுடன் அவனை பார்த்தாள்.

" ஆக்சுவலி தப்பு உன் மேல இல்ல. தப்பு என் மேல தான். என்னோட லவ்ல எதோ மிஸ்டேக் இருந்திருக்கு. அதான் நான் உன்னை எவ்ளோ லவ் பண்ணேனு உனக்கு கடைசி வரைக்கும் புரியவே இல்ல. நான் பண்ணுன தப்பு இது தான். ஃப்ரெண்ட்ஸ் , ஃபேமிலி வேணும்னு நெனச்சேன். ரெண்டுமே எனக்கு கெடச்சும் என்னால லைஃப்லாங் அவங்க கூட இருக்க முடியல" என்று சொல்லவும் அங்கே இருந்தவர்கள் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் விழித்தனர். வருணோ அவள் கூறியதை கேட்டு திகைத்தான்.

அவளுக்கு போன் வர அதை எடுத்தவள் " ஹலோ ! டோண்ட் வொர்ரி. நாளைக்கு மார்னிங் ப்ளைட்ல நான் வந்திடுவேன். நோ நோ ! நான் ஆல்ரெடி அங்க ஒரு ப்ளாட்கு அட்வான்ஸ் குடுத்துட்டேன். ஓகே! தேங்க்யூ" என்று பேசி போனை வைக்க அவளது நண்பர்கள் அவள் எங்கே செல்ல போகிறாள் என்று திகைப்புடன் விழிக்க அவினாஷ் அவள் அருகே வந்தான்.

" கீத்து! நீ எங்க போக போற?? ப்ளாட்டுக்கு அட்வான்ஸ் குடுத்துட்டேனு வேற சொல்லுற., பதில் சொல்ல போறியா இல்லையா"

" அவி! நான் வேற ப்ளேஸ்ல ஒரு ஜாப் ரெடி பண்ணீட்டேன். அவங்க என்னை ஒன் வீக் முன்னாடி வரச் சொன்னாங்க. பட் நான் தான் கடைசியா உங்க எல்லார்கூடவும் பர்த்டே கொண்டாடனும்னு ஆசைப்பட்டேன். அதுவும் நடந்துடுச்சு. நான் நாளைக்கு ஃபர்ஸ்ட் ஃப்ளைட்ல கெளம்புறேன் அவி" என்று தீர்மானமாக சொல்ல வருணுக்கு ஏதோ மனதில் வலிப்பது போன்ற உணர்வு.

அஜி அவள் அருகில் வந்தவன் " அக்கா! ப்ளீஸ் நான் ப்ரோக்கு புரிய வக்கிறேன்" என்று சொல்ல மெல்ல சிரித்தவள் கண்ணீரை விழுங்கியபடியே " புரியவைக்கிறதுக்கு இங்க எதுவுமே இல்ல . எல்லாமே ஒன் இயருக்கு முன்னாடியே முடிஞ்சு போச்சு. இன்னிக்கு ஜஸ்ட் நான் என்னோட நெலமையை சொன்னேன் அவ்ளோ தான். நீங்க ரொம்ப யோசிக்காதிங்க ! லைஃப்ல நீங்க இன்னும் நெறயா விஷயங்கள் ஃபேஸ் பண்ண வேண்டியிருக்கும். டோண்ட் பீ டூ எமோஷ்னல்" என்று சொல்லி அவனது கையை தட்டி கொடுத்துவிட்டு உள்ளே சென்றாள்.

அவள் செல்வதை பார்த்தபடியே அந்த டைரிகளை எடுத்தான் வருண். அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் அதை படிக்க படிக்க தன்னுடைய முட்டாள் தனத்தை எண்ணி தன் மீதே கோபம் கொண்டான்.

இரவு யாரும் வீடு திரும்பாமல் அங்கேயே இருக்க யாரும் தூங்காமல் மறுநாள் விடியக் கூடாது என்று மட்டும் வேண்டி கொண்டனர். ஆனால் சூரியன் யாருக்காகவும் உதிக்காமல் இருப்பது இல்லையே!